(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 22.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2020 நவம்பர் 12 வியாழக்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 மற்றும் நவம்பர் 03 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.00 மணிவரை இருக்குமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க விடயம் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளிலிருந்தும், இன்றைய தினம் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் ஏற்பாடுகளிலிருந்தும் விலக்குப்பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2020 நவம்பர் 13 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை சபை அமர்வு நாளாக இருக்குமாக. அன்றைய தினம் சபை அமர்வு நேரம், மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரை இருக்குமாக. பி.ப. 1.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2020 நவம்பர் 13 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீடு (2020) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

ஒதுக்கீடு (2021) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

குறைந்தபட்ச வேதனங்கள் (இந்தியத் தொழிலாளர்கள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

தொழிற்சாலைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.